வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண்: 119/2022 நாள்: 06.03.2026

அரசு தரப்பு சாட்சி : 24

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராஜசேகரன் | தாலுக்கா | : | தேனி |
| தந்தை பெயர் | கருப்பையா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| ஊர் | : தேனி | வயது | : | 47 /2026 |

( 1 முதல் 4 எதிரிகள் ஆஜர். )

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023 ம் ஆண்டு, பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அரசு தரப்பில் 24 ம் சாட்சியின் முதல் விசாரணை:–

நான் தற்போது கோவை மாநகர் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராகபணிபுரிகிறேன்.கடந்த 2021 ஆம் ஆண்டு தேவதானப்பட்டி வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது ஜெயமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.10/2021 சட்ட பிரிவுகள் 302, 201,120 பி IPC ஆக ஏற்கனவே வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வந்த வழக்கு கோப்பினை 21.08.2021 ஆம் தேதி எனது விசாரணைக்காக எடுத்துக்கொண்டேன். மேற்படி வழக்கின் புகார்தாரர் மற்றும் இதர சாட்சிகள் அனைவரையும் சம்பவம் குறித்து விசாரித்தேன். ஏற்கனவே கூறியவாறு வாக்குமூலம் அளித்தால் பதிவு செய்யவில்லை. வழக்கின் சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். சம்பவ இடம் சாட்சிகள், கைப்பற்றுதலின் போது இருந்த சாட்சிகள் அனைவரையும் விசாரிக்க ஏற்கனவே கூறியவாறு வாக்குமூலம் அளித்தால் பதிவு செய்யவில்லை.இவ்வழக்கில் ஏற்கனவே இருந்த புலக் விசாரணை அதிகாரி RFSL Madurai க்கு அனுப்பி வைத்த FTA card ன் அறிக்கை அதன் பின் பெறப்பட்டு 24.02.2022 ஆம் தேதி அறிக்கை

அளித்த அறிவியலாளர் கதிரவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட ATM debit card சம்பந்தமாக ஏற்கனவே வேண்டுகோள் கடிதம் அளிக்கப்பட்டு அதற்கான பதில் அறிக்கை பெறப்பட்டது. அது சம்பந்தமாக விரு வீடு கனரா வங்கி மேலாளர் தியாகு என்பவரை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்தேன். பின்னர் 25.02.2022 ஆம் தேதி ஏற்கனவே இவ்வழக்கில் கொலையுண்டு இறந்து போன ஆனந்தராஜ் என்பவரின் புகைப்படம் super imposition ஆய்விற்காக சென்னை தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்ட்டு அறிக்கையினை பெற்று உதவி இயக்குநர் புஷ்பராணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் பெரியகுளம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, நீதிமன்ற Head clerk வேல்விழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஏற்கனவே இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட கொலையுண்ட இறந்த நபர் ஆனந்தராஜ் மற்றும் எதிர்களின் தொலைபேசி எண்களுக்கு CDR details இதர விவரங்கள் வழங்கிய airtel nodal officer ஜெயகுமார் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த CDR details **அ.சா.ஆ. 26** ஆகும். (மேற்படி CDR details வழங்கிய service provider–யை விசாரிக்கவில்லை என்று எடுத்துரைத்த கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து கொண்டு வழக்கின் சட்டப்பிரிவுகள் 302, 201, 120பி IPC என்பதனை 302, 201 120பி r/w. 34 IPC ஆக மாற்றம் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை (2) **அ.சா.ஆ. 27** ஆகும். விசாரணையின் போது பெறப்பட்ட விஸ்ரா அறிக்கை **அ.சா.ஆ.28** ஆகும். DNA அறிக்கை MDU/DNA/25/2021 **அ.சா.ஆ. 29** ஆகும். DNA அறிக்கை MDU/DNA/LR No.94/2022 **அ.சா.ஆ. 30** ஆகும். (மேற்படி அ.சா.ஆ. 29 மற்றும் அ.சா.ஆ .30 ஆகிய ஆவணங்கள் உரிய சாட்சி மூலம் குறியீடு செய்யப்படவில்லை எடுத்துரைத்த கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது).

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் படி புகார் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் அவருக்கு கிடைத்த தகவலின் படி சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு பின்னர் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலருக்கு யார் தகவல் கொடுத்தார் என்று எனது புலன் விசாரணையில் தெரியவில்லை. கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யும் போது அவருக்கு யார் தகவல் கொடுத்தார் என்று நான் கேட்கவில்லை என்றால் சரிதான். பிரேதம் கிடந்த இடம் உமாராணிக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். உமாராணி இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு எப்போது சென்றேன் என்றால் வழக்கை புலன் விசாரணையை எடுத்து கொண்ட 21.08.2021 ஆம் தேதி சம்பவ இடத்திற்கு சென்றேன். அன்றைய தினம் நான் சென்ற போது சம்பவ இடத்தை சுற்றி பார்த்தேன். நான் அவ்வாறு சம்பவ இடத்தை சுற்றி பார்க்கும் போது தடய பொருட்கள் எதுவும் கைப்பற்றவில்லை. குறிப்பாக இரு சக்கர வாகனத்தை கைப்பற்றினேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கின் சரித்திரம் என்பது காவல் ஆய்வாளர் திரு. குருவெங்கட்ராஜ் என்பவர் எந்த சந்தர்ப்பத்தில் எதற்காக எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் எதற்காக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் 27.01.2021 ஆம் தேதி வரை நடந்த நிகழ்வுகளுக்கான வழக்கின் சரித்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. பெட்ரோல் பங்கில் வேலை செய்யும் ரமேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் முதல் விசாரணை மேற்கொண்ட அதிகாரியிடம் சொன்ன வாக்குமூலத்தையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பெட்ரோல் வாங்கிய நபரின் அங்க அடையாளங்களை முதல் விசாரணை அதிகாரி வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளாரா என்றால் அங்க அடையாளங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை. ரமேஷ் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தில் அவரை பார்த்தால் அடையாளம் தெரியும் என்று சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை. ரமேஷ் என்பவரை வைத்து பெட்ரோல் வாங்கி சென்ற நபர் யார் என்று அடையாளம் காண அடையாள அணிவகுப்பு

நடத்தப்பட்டதா என்றால் இல்லை. பெட்ரோலை வாங்கும் செல்லும் நபர் சாதாரணமாக பாட்டில் அல்லது கேனில் வாங்கி செல்லக்கூடாது என்ற விதி உள்ளது எனக்கு தெரியும். பெட்ரோல் பங்கில் இயங்கிய மீட்டர் digital மீட்டரா என்றால் எனக்கு தெரியாது. காட்ரோட்டில் செக்போஸ்டில் உள்ள PC ரமேஷ் கண்ணன் என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். செக்போஸ்டில் இருந்து வாங்கிய Pen drive மூலம் பார்த்த நபர் பின் பக்கம் தான் தெரிகிறார் என்றும் முன் பக்கம் தெரியவில்லை என்றும் சொன்னால் திரும்ப பார்த்தால் தான் சொல்ல முடியும். Pen drive ல் பார்த்த நபரின் உருவத்தில் எதிரிகளில் யாருடைய உருவமாவது ஒத்து போகிறது என்று அறிய நிபுணர்க்கு எதிரிகளின் உருவ புகைப்படங்களை அனுப்பி கருத்து ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. அ.சா.3 சிவராஜ் அளித்த வாக்குமூலத்தில் தானும் பெரியப்பாவும் கருப்பாயி வீட்டிற்கு சென்று இறந்த ஆனந்தராஜ் பற்றி விசாரித்ததாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ரமேஷ் என்பவர் ஒரு நபர் 1000/– ரூபாய்க்கு டீசல் போட்டதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் 800/– ரூபாய்க்கு டீசல் வாங்கி சென்றதாக சொல்லியுள்ளார். திரு. குருவெங்கட்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிஹ செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் குற்ற பதிவேட்டு அறையில் இருந்து எத்தனை புகைப்படங்களை பெற்று பார்த்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னால் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரிடமாவது அவர்கள் பார்த்த நபர்களுடைய அங்க அடையாளங்கள் பற்றியும் அவர்கள் அவர்களை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியுமா என்று அதை நிருபிக்க அடையாள அணிவகுப்பு எதுவும் நடத்தவில்லை. கொடைக்கானல் செல்லும் காட்ரோடு அருகே 3 பெட்ரோல் பங்குகள் உள்ளன என்றால் சரிதான். அந்த பெட்ரோல் பங்கின் உரிமையாளரை நான் விசாரிக்கவில்லை. ரமேஷ் என்பவர் பணிபுரியும் பெட்ரோல் பங்கில் எத்தனை ஊழியர்கள் வேலை பார்த்தார்கள் என்பதற்கான தொழிலாளர் நல அலுவலரால் வழங்கப்படும் ஊழியர்களின் அட்டவணையை நான் பார்வையிட்டேனா என்றால் ரமேஷ் என்பவர் பணிபுரிந்த பெட்ரோல் பங்கில் அவ்வாறான பதிவேடு எதுவும் இல்லை. ரமேஷ் என்பவர் அங்கு தான் பணிபுரிந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரமேஷ்

என்பவர் அங்கு பணிபுரியவில்லை என்ற காரணத்தால் தான் அவர் பெட்ரோல் பங்கில் பணி செய்ததற்கான ஆவணம் எதுவும் இந்த வழக்கில் இந்நாளும் எந்த புலன் விசாரணை அதிகாரிகளாலும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 1,2 எதிரிகளிடம் பதிவு செய்யப்பட்டதாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலங்கள் 27.01.2021 அன்று காலை 06.30 மணிக்கு இரண்டு வாக்குமுலங்களும் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ. 26 படி இணைக்கப்பட்ட consumer application form களின் படி முதல் விண்ணப்பம் முருகன் லெட்சுமணன் என்பவர்களின் பெயரிலும் 2 வது விண்ணப்பம் பிரபாகரன் என்பவர் பெயரிலும் 3 வது விண்ணப்பம் ஆனந்தராஜ் என்பவர் பெயரிலும் இருப்பதாக காணப்படுகிறது என்றால் சரிதான். நான் tower location ஐ கண்டுபிடித்து அதற்குரிய விவரங்களை விசாரணை செய்தேனா என்றால் tower location குறித்து கேட்கவில்லை. நான் புலன் விசாரணையின் போது விசாரித்த சாட்சிகள் ஏற்கனவே விசாரணை அதிகாரிகளிடம் சொன்ன வாக்குமூலத்தின் படி என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்று கூறியிருப்பது உண்மைக்க புறம்பானது என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சிகளையும்நான் சொன்ன மாதிரி விசாரிக்கவில்லை என்றும் அவர்கள் சொன்னதாக சொல்லக்கூடிய வாக்குமூலங்கள் வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் தான் நான் தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மூலமாக குறியீடு செய்ப்பட்ட ஆவணங்கள் உண்மைக்கு புறம்பாக பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. இறந்த போன நபர் அந்த நபரின் உடல் தான் என்று சரியாக கண்டுபிடிக்காமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை உண்மைக்கு புறம்பாக தொடர்பு படுத்தி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1,2 எதிரிகளின் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் 3, 4 எதிரிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். என்னுடைய புலன் விசாரணையின் படி 27.01.2021 ஆம் தேதி 1, 2 எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 27.01.2021 ஆம் தேதிக்கு முன்பாகவே இவ்வழக்கின் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் 27.01.2021 ஆம்தேதி

பெற்றதாக சொல்லப்படும் 1, 2 எதிரிகளின் ஒப்புதல் வாக்கு மூலங்கள் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 27.01.2021 ஆம் தேதி நான் பதிவு செய்த ஒப்புதல் வாக்கு மூலங்கள் எந்த இடத்தில் வைத்து கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டது என்று ஒப்புதல் வாக்கு மூலங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். உண்மைக்கு புறம்பாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C.Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.